# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
புரட்டாதி 1
ஷவ்வால் பிறை 13
புதன் (17-9-1978)
நிருவியது 1947
புத்தகம் 32
இதழ் 31

விலை சதம் 60


# "தமிழர்களுக்கு அதிகப்படியான உரிமைகள் வழங்கிவிட்டதாக சிங்களவர் கூறுகிறார்களாம்!"

## ஜனாதிபதி ஜே. ஆரின் பேட்டி

தமிழர்களுக்கு தமது அரசாங்கம் அதிகப்படி உரிமைகள் வழங்கி விட்டதாக சிங்களவர்கள் இப்போது கூறுவதாக ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள் பத்திரிகை நிருபர் ஒருவருக்கு அளித்த செவ்வியொன்றில் தெரிவித்திருக்கிறார்.

விஜிதா யாப்பா என்ற நிருபர் ஜனாதிபதி ஜே. ஆருடன் நடத்திய செவ்வியொன்று 12-9-78 டெயிலி நியூஸ் இதழில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் கேட்கப்பட்ட சில கேள்விகளும், ஜனாதிபதி அளித்துள்ள பதில்களும் வருமாறு:

கே: இப்போது தமிழர் விடுதலைக்கூட்டணி சம்பந்தமாக உங்கள் கருத்து என்ன!

ஜே. ஆர்: தனிநாடு ஒன்றைத் தவிர, அவர்களது ஏனைய சகல கோரிக்கைகளையும் நாங்கள் வழங்கி விட்டோம். உண்மையில் அவர்களை நாம் அரசாங்கக் கட்சிப் பா.உ.க்கள் போலவே நடத்தி வருகிறோம். ஆயிரம் பேர் வேலை வங்கிப்படிவங்களை அவர்களுக்கும் அளித்திருக்கிறோம். அவர்கள் இடமாற்றங்களைக் கோரினால், நம்மால் முடிந்தவரை நாம் செய்து கொடுக்கிறோம். நாங்கள் அதிகமாகக் கொடுத்து விட்டதாக சிங்களவர்களே இப்போது கூறுகிறார்கள்.

கே:- வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள குடியேற்றங்கள் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ஜே.ஆர்.:- இந்த விஷயம் மாவட்ட அமைச்சர்களின் அதிகாரத்துக்குள் வருவதால், இது மாவட்ட அமைச்சர்களுக்குரிய விடயமென்று நாங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியிருக்கு கூறிவிட்டோம்!

கே:- ஜாதிக விமுக்தி பெரமுனை முனைப்பாக பல கூட்டங்களை நடத்தி விறுவிறுப்புடன் செயல்படுவது போலத் தெரிகிறதே!


ஜே.ஆர்:- ஆம். அவர்கள் தாம் விரும்பியதைக் கூறுவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு. ஆனால் நான் அவர்களிடம், ஆயுதப்புரட்சியிலிறங்க வேண்டாமென்றும், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஜனநாயக முறைகளைப் பின்பற்றுமாறும் கூறியுள்ளேன். யாராவது ஆயுதம் எடுக்க முயற்சித்தால், அவர்கள் மீது கடும் நடவடிக்கையெடுக்கப்படும்.

கே:- அப்படியென்றால் இதன் பொருள் என்ன?

ஜே.ஆர்.:- தடை விதித்தல் ஒன்று. புலித்தடைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் ஜாதிக விமுக்தி பெரமுனையை மட்டுமின்றி ஜனநாயகவிரோதப்பாதையைப் பின்பற்ற முயற்சிக்கும் எந்த இயக்கத்தையும் கட்டுப்படுத்தும்!

கே:- ஆனால் புலித்தடைச்சட்டம் ஓராண்டுக்கு மட்டும் தானே?

ஜே.ஆர்:- ஆம், ஆனால் அச்சட்டத்தை எப்போதும் நீடிக்க முடியும்!




"வாழ்க தார்மீகம்!"

## வாழ்த்துகிறோம்

நமது யாழ்ப்பாணமாநகர சுதந்திரன் விற்பனையாளர்—ராஜன் புத்தகசாலை அதிபர் திரு. க. நடராசாவும், மட்டக்களப்பு மாநகர சுதந்திரன் விற்பனையாளர் கணேசன் ஸ்டோர்ஸ் அதிபர் திரு. கணேசன் அவர்களும் புதுமனை புகுந்துள்ளனர். சுதந்திரன் வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் காட்டிவரும் இந்த இருவருக்கும் எமது மனங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—ஆர்

## இன்று வன்னியசிங்கம் நினைவு விழா

கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கம் அவர்களின் நினைவுவிழா இன்று (17-9-78) ஞாயிறு மாலை 6 மணிக்கு இருபாலைச் சந்திக்கு அருகிலுள்ள மைதானத்தில் கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது. தமிழர் விடுதலைக்கூட்டணியின் கோப்பாய்த் தொகுதிக் கிளையினரால் ஒழுங்குசெய்யப் பட்டிருக்கும் இவ்விழாவில் கூட்டணி பா. உ.க்கள், பிரமுகர்கள், பங்குபற்றி உரைநிகழ்த்தவுள்ளனர்.

# கோப்பாய்க் கோமகனை நெஞ்சிலிருத்துவோம்!

ஈழத் தமிழினத்தின் இன, மொழி, விடுதலை உணர்வின் மூலவித்தாக அமைந்தவரும் — தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக அந்தரங்க சுத்தியுடனும் தியாக உணர்வுடனும் இறுதிவரை போராடி அதிலே தம் உடல், பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தவருமான கோப்பாய்க் கோமான் — தியாகமாமலை—அமரர் வன்னியசிங்கம் அவர்களின் 19வது நினைவு அஞ்சலி தினம் இன்று — செப்டம்பர் 17ம் நாளாகும்!

சிதறிக்கிடந்த தமிழினத்தை ஒரே தேசிய இனமாகக் கட்டி [illegible] ணைத்து—பல அறப்போராட்டங்களைத் திட்டமிட்டு நடத்தி—தமிழ்ப் பகைவர்களைப் புறங்கண்டு—தமிழ் மக்களின் விடுதலைக்காக தூக்கு மேடையேறவும் தயாரென முழங்கி—தமிழ் சமுதாயத்துக்காக மூச்சுவிடாமல் ஓயாது ஒழியாது உழைத்து—அந்த உழைப்பின் காரணமாக தனது 48வது வயதிலேயே 1959ம் ஆண்டு உலகைவிட்டுப் பிரிந்தாலும்—இன்றைக்கும் என்றைக்கும் உண்மையான விடுதலை வீரர்களுக்கு, இலட்சியவாதிகளுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக விளங்கிக்கொண்டிருக்கும் கொள்கைக் கோமான் அமரர்வன்னியசிங்கம் அவர்களுக்கு எமது அஞ்சலியைசெலுத்துவோம்! அமரரின் தியாகக் குடும்பத்துக்கு தமது வீர வணக்கத்தையும் செலுத்துவோம்.

—ஆர்.



# "தமிழர்களைப் பிரிப்பதற்கே தொண்டமானுக்கு மந்திரிப் பதவி"

### —தி. மு. க. ஏடு கருத்து!

"இலங்கையில் உள்ள தமிழர்களை இந்தியத்தமிழர்கள், இலங்கைத்தமிழர்கள் என்று பிரிக்கும் ஒரு முயற்சியாகவே இலங்கை அரசு திரு. சொ. தொண்டமானுக்கு மந்திரி பதவி வழங்கியுள்ளது. இலங்கைத் தமிழ் மக்களை, ஈழத்தமிழர்கள் இந்தியத்தமிழர்கள் என்று பிரித்து திரு. சொ. தொண்டமானுக்குப் புதிய அமைச்சொன்றை உருவாக்கி அவர் அமைச்சராக்கப்பட்டுள்ளார். இந்த வகையில் தமிழர்களைப்பிரிக்கும் முயற்சியில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன வெற்றிபெற்றுள்ளார்."

— இவ்வாறு கலைஞர் மு. கருணாநிதி அவர்களை ஆசிரியராகக் கொண்டுவெளிவரும் திமுக நாளேடான முரசொலி கருத்து வெளியிட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரச் சுடர்

# வன்னியசிங்கம்

1959 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆம் தேதி பொழுது விடியாதிருந்திருக்கலாம் அன்று விடிந்த பொழுது தமிழ் மக்களைப் பொறுத்தவரை விஷப்பொழுதாகி விட்டது. தந்தை செல்வாவுடன் இணைந்து தமிழ் மக்களின் இலட்சியப்பயிரை ஒம்பி உருவாக்கிய உத்தமன்—தம் வளமான சொந்த வாழ்வை அப்பயிருக்கு எருவாக்கி இட்டு வளர்த்த ஏந்தல்—கோப்பாய்க் கோமான் என்ற பெற்றியுடைய எம் குலக்கொழுந்து — அன்று அந்தில் பொழுதினிலே அயர்ந்து ஆழத்துயின்று விட்டார்.

## சாணக்கியர்

தமிழ் இனத்தைக் கருவறுக்கும் சதித்திட்டம் அனைத்தையும் தகர்த்தெறிந்து அவர் நலம் காத்த இந்தச் சாணக்கியனர், சாதிச் சழக்குகளை எதிர்த்து சமர் புரிந்து தமிழர் குலம் காத்த பெரியோன்; அரசியல் ஓர் அங்காடி என்று அங்கு வர்த்தகச் சிந்தனைகளே அடிப்படைக் கோட்பாடுகள் என்றும் இருந்தநிலையை மாற்றியமைத்து நேர்மையான நெறிப்பாடுகளுக்கு நிலைக்களனாக வாழ்ந்த ஒழுக்கசீலர். அரசியல் அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் என்ற கருத்தைப் பொய்யாக்கியவர் எந்தை செல்வா என்றால், அரசியல் நாணயஸ்தர்களின் அரங்கு எனும்படி வாழ்ந்தவர் அமரர் வன்னியர்.

## தியாகம்

1956 ஆம் ஆண்டு யூன் 5 ஆம் தேதி சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து காலிமுகத்திலே தமிழ் பிரதிநிதிகள் சத்தியாக்கிரகம் செய்த வேளையிலே, சிங்களக்காடையரால் மேலாடையும் கிழிக்கப்பட்டு தாக்குண்ட தகைமையாளர் வன்னியர் அன்று போராட்ட விதிக்கேற்ப பொறுமையுடன் அமர்ந்திருந்த அந்தச் சிங்கத்தின் கர்ச்சனையை 1958 ஆம் ஆண்டு மேமாதம் வவுனியா மாநாட்டில் கேட்டோம்: "தமிழ் மக்களின் உரிமைக்காக குரல்கொடுப்பதுதான் தேசத் துரோகம் என்றால், அந்தக் குற்றத்தை ஆயிரம் தடவைகள் செய்து தூக்கு மேடையில் தொங்கவும் நான் தயார்'' எனத் தம் தலைமைப் பேருரையில் முழங்கினார். சிங்களச் சிறீயை எதிர்த்துச் சிறைசென்று மீண்ட செம்மல் மீண்டும் 1958 இனக் கலவரத்தைத் தொடர்ந்து வீட்டுக்காவலில்பூட்டிவைக்கப்பட்டார்.

## தூய்மையாளர்

அரசியல் தலைவர்களின் வாழ்வு பதவி, பட்டம், பணம், பரிசு இத்தியாதி அலங்காரங்கள் பூணப்பெறறது என்ற நிலையை மாற்றியமைத்து போலித்தலைவர்களின் போக வாழ்வுக்கு முடிவு கட்டியது தமிழரசுக் கட்சி. இக்கட்சி உருவாக்கிய தியாக வாழ்வினைத் திவ்வியமாகப் பிரதிபலித்தவர் அண்ணல் வன்னியர். தொண்டினால் உயர்ந்த தூய்மையாளர் அவர். சொந்த நலன்களையும் சுகபோகங்களையும் நிராகரித்த வாய்மையாளர்.

## தாயகம்

எமது தாயகத்து மண்ணை சிங்களக்குடியேற்றம் சூறையிட்ட சூழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டியவர்—தட்டிக் கேட்டவர் — தகர்த்தெறிந்தவர் அமரர். ஒத்துழைப்பு தமிழ்த் தலைவர்கள் சிங்கள ஆதிபத்தியத்தின் அடிவருடிக் கிடந்த கால கட்டத்தில், ஏற்கனவே ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை அவரால் மீட்க முடியவில்லையெனினும் தமிழரசுக்கட்சி தமிழ் மக்களின் தலைமையைச் சூட்டிக்கொண்ட பின்னர் எமது மண்ணை ஆக்கிரமிக்க எடுக்கப்பட்ட முயற்சிகளையெல்லாம் வெற்றிகரமாக முறியடித்த தனியொரு சக்தி அமரர் வன்னியரே. இதற்கு மேலாக, தமிழ்த் தாயகம் என்ற உணர்வையும் எமது தாயகத்தின் ஒவ்வொரு பிடி மண்ணும் ஒரு கோடி பொன்னுக்குச்சமம் என்ற உணர்ச்சியையும் தமிழ் மக்களுக்கு ஊட்டியவர் வன்னியரே.

## சமத்துவம்

சாதி வெறியும், சமய நெறியும் இனங்காண முடியாதவாறு வைதீக வட்டத்தினரால்பின்னிப்பிணைத்துப் பேசப்பட்டது. தமிழ் மக்களின் விடிவுக்கு சமூகப் புரட்சியும் சமத்துவச் சிந்தனைகளும் அவசியம் எனக் கண்ட வன்னியர் வைதீக வட்டத்தினருடன் நேருக்கு நேர் முட்டி மோதிக்கொண்டார். பழுத்த வைதீகப் பரம்பரையினரான அவரால் சிவநெறியின் செம்மையைக்காட்டமுடிந்தது; சாதி வெறியின் கொடுமையைச் சாடவும் முடிந்தது. பிறப்பால் பெரியவன் பேருண்மையை அடித்துப் பேசிய போது வைதீகச் சமூகம் வாயடைத்து நின்றது.

## சுதந்திரச்சுவாலை!

தமிழ் மக்களின் பூகோள வரப்புக்களையும்வரலாற்றுக் குறிப்புக்களையும் பொருள் வளச் சிறப்புக்களையும் அரசியல் சித்தாந்தத்தையும் சமூகக் கோட்பாடுகளையும் சமய நெறிப்பாடுகளையும் வரையறுத்த பணியில் அமரர் வன்னியரின் பங்கு பாரியது. தமிழ்மக்களின் கோட்பாடுகளை மட்டுமின்றி, செயற்பாடுகளையும் செப்ப

**கரிகாலன்**

னிட்ட அமரரின் சேவை சீரியது; தம் தியாக வாழ்வின் மூலம் திக்கற்ற தமிழ் சமூகத்தின் தீபஸ்தம்பமாக விளங்கினார். வன்னியர் என்ற கலங்கரை விளக்கிலே கட்டிக் காக்கப்பட்ட தீபம் இன்று சுதந்திரச் சுவாலையாக இலட்சோப லட்சம் இளைய தலைமுறையினரின் நெஞ்சில் சுடர்விட்டு எரிகிறது. இதற்கு எண்ணெய் ஊற்றுவோம்! அண்ணல் வன்னியரின் நிழலிலே வளர்ந்த எம் போன்றவர்களின் அபிலாஷை இதுவே.

# வரலாற்றாசிரியர் வன்னியசிங்கம்

மூச்சுள்ள தமிழ் மைந்தன்
'அரசு' கோரி
மூவர்ணக் கொடியோடு
முழக்கமிட்டோன்!
பேச்சுக்குஞ் செயலுக்கும்
பாலங்கண்ட
பேராளன்! தமிழீழப்
பெரியார் 'செல்வா'
வாய்ச் சொல்லைத் தட்டாத
தொண்டன்! வீரன்!
வருமானம் தமிழ் மானம்
என்று வாழ்ந்த
பேரச் செல்வன்
இவனுக்கு நிகரும் உண்டோ
போற்றாத கவிஞர்க்கு
வெற்றியும் உண்டோ?

என்று தோன்றயிருக்கும் தமிழ் ஈழத்தின் அரசவைக் கவிஞனாக விளங்கவிருக்கும் காசிஆனந்தன் தன்னை மறந்து பாடுகின்ற அளவிற்கு தமிழ் மூச்சோடு வாழ்ந்த எம் இலக்கியத்தின் மூத்த மைந்தனாக விளங்கியவர் எம் வன்னியசிங்கம் அவர்கள். அவர் தன் பேச்சிற்கும் செயலுக்கும் பாலங்கண்ட பேராளனாக விளங்கி செல்வாவின் வாய்ச் சொல்லை தாரகமந்திரமாக ஏற்று தன் வருமானம்தமிழ் மானம் என்று வாழ்ந்தவர்.

## நிலமிசைநிலைத்த புகழுடைய வாழ்வு

ஈழத்தமிழ் இனத்தின் நிலைத்த நல்வாழ்விற்காக இவர் ஆற்றிய பணி, பட்டபாடு எளிதில் சொற்களில் வழங்கத்தக்கவையல்ல. சிறை கொண்டு வைத்தாலும் எனது வாழ்வு செத்தாலும், பட்டாலும், சிதறினாலும், குறிகொண்டு சுட்டாலும் ஈழநாட்டின் மூத்த குடிமகன் தமிழ் மகனை வாழச் செய்வேன் என்று உறுதிபூண்டு தன்னை முற்றாக அர்ப்பணித்தவர் நம் வன்னியசிங்கம் அவர்கள். இங்கு வாழ்கின்ற 'தமிழர் கூட்டம் ஆடல்ல மாடல்ல தெரிவீர்! என்று வெறி கொண்டு போரிட்ட மறவன்' என்று மற்றுமோர் இடத்தில் நம் கவிஞர் கூறும் முறையில் விளைவுகள் எதையும் பொருட்படுத்தாது தமிழனை அழிக்க எந்த எதிரியோடும் முட்டிமோதியவர் நம் வன்னியர் அவர்கள்.

எம் வன்னியர் இவ்வுலகில் வாழ்ந்தது 48 ஆண்டுகள். அவரின் மண வாழ்வு 16 ஆண்டுகள். அவரின் அரசியல் வாழ்வு 12 ஆண்டுகள். இவ்வளவு சுருக்கம்மிக்க வாழ்வை இவர் வாழ்ந்த போதும் தமிழனின் முன்னேற்றத்திற்கு ஒவ்வொரு துறையிலும் இவர் ஆற்றிய பணி ஆழம் மிக்க பணியாக—தாக்கம் மிகவுடைய பணியாக இருந்ததினால் 19 ஆண்டுகள் உருண்டோடிய நிலையிலும் அவர் நினைவு—அவரின் தோற்றப் பொலிவு எம்நெஞ்சை விட்டு அகல மறுக்கிறது.

இன்றைய சூழ்நிலையில் அன்று வன்னியர் உரைத்த வளமான உண்மைகள் எம் வாழ்விற்கு உரம் ஊட்டுவதாக விளங்குவதினால் அவற்றில் முக்கிய பகுதிகள் இங்கு எடுத்து இயம்பப்படுகின்றன.

1956ம் ஆண்டிலேயே அதாவது 22 ஆண்டுகளுக்கு முன்பேயே சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து நிகழ்த்திய உரையில் பின்வரும் ஏற்றமிகு உண்மைகளை இடித்துரைத்துள்ளார்.

### தமிழர் வந்தேறு குடிகளா?

''சில பேச்சாளர்கள் இலங்கை ஒருகாலத்தில் சிங்களப் பிரதேசமாக இருந்ததென்றும் தமிழர் பின்னர் வந்து குடியேறியவர்கள் என்றும் சொன்னார்கள். ஆனால் அவர்கள் ஒன்றை மறந்து விட்டார்கள். புத்தபிரான் பிறந்த இந்தியாவிலேயே பௌத்தர் வசித்தி

**ஈழவேந்தன்**

ருக்கிறார்கள். இந்தியாவில் பௌத்த சின்னங்கள் இருக்கின்றன.

அன்று இந்தியாவும் இலங்கையும் ஒரே காலத்தில் [illegible] பரப்பாக இருந்தன என்பதை மறந்து விட்டார்கள். தென்னிந்தியாவும்— இலங்கையும் ஒரே பிரதேசமாக இருந்த காலத்திலே தென் இந்தியாவில் இருந்த தமிழ் மக்கள் இலங்கையில் இல்லை என்று சொல்வதுபொருத்தமாகாது.

கடல் கோளினாலே இந்தியாவும் இலங்கையும் பிரிந்தன: சிங்களச்சமூகம் 2500 வருடங்களுக்குப் பின்னுள்ளது. 5000 வருடங்களுக்கு மேலாகத் தமிழும் தமிழ்க் கலாச்சாரமும் இலங்கையிலும் இந்தியாவிலும் இருந்ததென்பதை மறுக்க முடியாது.

ஆனால் உண்மையை மறந்து விடுவதில் ஒரு சுகமுமில்லை. மகாகவி சுப்பிரமணிய பாரதியர் கூறிய அடிகள் ''யாருமட் வகுத்தற்கரிய பிராயத்தளாயினுமே எங்கள் தாய்— இந்தப் பாருளெந்நாளுமோர் கன்னிகை என்னைப் பயின்றுடுவாள் எங்கள் தாய்'' என்று தமிழ்த் தாயைப்பற்றிக்கூறலாம். இந்த வசனங்களிலே தமது தாய் நாட்டைப் பற்றிக் குறிப்பிட்ட போதும் இந்த வசனங்கள் நமது தமிழ்த் தாய்க்கும் பொருந்தும் என்பதினாலே அதை நான் கூறுகிறேன்.

இன்று வன்னியர் நினைவு நாள், அவர் ஈழம் வாழ் தமிழ் இனத்தின் பொருட்டு ஆற்றிய பல்துறைப்பணிகள் அனைத்தையும் ஒவ்வொருவரும் நினைவு கொள்ளல் கடினம் எனினும் ஒவ்வொரு தமிழ் மகனும் அவர் ஆற்றிய ஒரு துறைப் பணியையாகுதல் நினைவு கொள்ளல் தமிழ் இனத்திற்கு பயன்பல அளிக்கும். அவர் நினைவைப் போற்றும் முறையில்எதைத் தான் நாம் செய்யாது விடினும் அவர் ஊட்டிய வரலாற்று உணர்வையாகுதல் பெற்றுப் பெருவாழ்வு வாழ முயல்வோமாக. வேறுசொற்களில் விளம்பின் சிலர் வாய்க்கு வந்தபடி பேசுவது போல ஈழத்தின் வந்தேறு குடிகள் அல்ல நாம், மாறாக இந்நாட்டின் பழங்குடி மக்கள் நாம், எமக்கென்று ஒரு தனிவரலாறு, எமக்கென்று ஒரு தனிமொழி, எமக்கென்று ஒரு தனிப்பண்பாடு எமக்கென்று ஒரு தனித்தாயகம் உண்டு. இப்பேருண்மைகளை இந்நாட்டின் சிங்கள அரசு உணரும் வரை நாட்டில் அரசியல் அமைதி என்பது ஏற்படப்போவதேயில்லை. இது உறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்புச் சட்டம் தமிழர்களை கட்டுப்படுத்தாது!

## லண்டன் பிபிசிக்கு தலைவர் அமிர் செவ்வி!

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவுதிரட்டுவதற்காக வெளிநாட்டில் சுற்றுப் பயணம் செய்யும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகமும் சிறீலங்காவின் எதிர்க் கட்சித்தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் பா.உ. அவர்களை லண்டன் பி. பி. சி. யின் சார்பில் அதன் தென்னுசிய நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பான இயக்குனர் திரு. வில்லியம் கிரௌலி (MR. WILLIAM CROWLEY) செவ்வி கண்டார். இந்த செவ்வி நிகழ்ச்சி 9-9-78 அன்று லண்டன் பி. பி. சி. யில் ஒலிபரப்பப்பட்டது. இச் செவ்வியின்போது விடுக்கப்பட்ட வினுக்களுக்கு திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தனக்கேயுரிய மிடுக்கான குரலில் ஆங்கிலத்தில் அளித்தபதில் களின் தமிழாக்கம் இங்கு இடம் பெறுகிறது.



கே: மிஸ்டர் அமிர்தலிங்கம், இலங்கையின் புதிய அரசியலமைப்பு தமிழர்களுக்கு புதிய சலுகைகளை வழங்கியிருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா?

அமிர்: இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் நிலையில் புதிய அரசியலமைப்புத்திட்டம், எந்த விதமான அடிப்படை மாற்றத்தையும் புகுத்தவில்லை. மொழியைப் பொறுத்தவரை புதிய அரசியலமைப்பு சில சலுகைகளை வழங்கியுள்ளதென்பதில் சந்தேகமில்லை. ஆனல் சிங்களப் பெரும்பான்மையினருக்கு அடிமைப்பட்டவர்களாகவே தமிழர்களின் நிலை தொடர்ந்துஇருந்துவருகிறது. இதற்கு எதிராகவே தமிழர்கள் போராடிவருகிறுர்கள். தமிழர்கள் ஆளப்படும் சாதி, சிங்களவர்கள் ஆளும் சாதியென்ற நிலையை புதிய அரசியலமைப்பு எவ்விதத்திலும் மாற்றியமைக்கவில்லை!

கே: புதிய அரசியலமைப்பை செயற்படுத்துவதற்கு உங்கள் கட்சி அரசாங்கத்துடன் ஒத்துழைக்குமா?

அமிர்: தமிழ் மக்களை இந்தப்புதிய அரசியலமைப்பு எவ்வகையிலேனும் கட்டுப்படுத்தாது என்று அறிவித்து விட்டோம். ஆனல் எமது கருத்தை உலகின்முன்வைப்பதற்காக பாராளுமன்றத்தைத் தொடர்ந்து ஒரு மேடையாகப் பயன்படுத்துவோம். அந்த அளவில்மட்டும் இந்த அரசியலமைப்பின் கீழ் நாம் பணியாற்றுவோம். இதற்கு மேலாக எக்கட்டத்திலும் இந்த அரசியலமைப்பை நாம் ஏற்கவே மாட்டோம். தமிழ் தேசிய இனம் தன்னைத் தானே ஆளும் உரிமை அங்கீகரிக்கப்படும்வரை இந்த நிலையே நீடிக்கும்.

கே: தனிநாட்டுக்கோரிக்கை சம்பந்தமாக அரசுடன் சமாதானத்தீர்வு எதற்கும் வரவிடாமல், உங்கள் கட்சியிலுள்ள இளைஞர்களாலும், கட்சிக்கு வெளியேயுள்ள விடுதலைப்புலிகள் போன்ற தீவிரவாதிகளாலும் உங்கள் கைகள் கட்டப்பட்டுள்ளனவா?

அமிர்: தீவிர இளைஞர் இயக்கங்களினலோ, அல்லது விடுதலைப்புலிகளாலோ அல்லது அதுபோன்ற வேறு எத்தகைய இயக்கங்களினலுமோ எமது முடிவுகள் எதுவும் கட்டுப்படுத்தப்படவில்லையென்பதை உங்களுக்கு நான் நேரடியாகவே கூறி விடுகிறேன். எமது நாட்டைநாமே ஆட்சிபுரிய ஆசீர்வதிக்கப்பட்டுள்ளோம். அந்த இலக்கை நோக்கியே எமது ஆழமான ஆலோசனைக்குப்பின் ஒவ்வொருமுடிவையும் எடுக்கிறேம். அந்த இலக்கை நோக்கி பலபடிகள் முன்னேறிவிட்டோம். எமது கைகள் எவராலும் கட்டுப்படுத்தப்படவில்லை. மக்கள் எமக்குத் தந்த ஆணைக்கு மட்டுமே நாம் கட்டுப்பட்டுள்ளோம். இந்த ஆணையை காத்திரமானதாகவும் புனிதமானதாகவும் நாம் கருதுகிறேம். இந்த ஆணையை நிறைவேற்றவே நம் இலட்சியப்பாதையில் முன்னேறுகிறேம்.''

★



# இலங்கையின் சொந்தக்காரர்கள் திராவிட இனத்தவர்களே!

இலங்கை!— வாழப்போய்த் தங்கிய வம்புமடமல்ல, தமிழருக்கு ஆண்டாண்டு காலமாய், அண்ணனும் தம்பியும் போல ஓடி விளையாடிய கூடம். முடியுடை மூவேந்தர்கள் இறவாப் புகழோச்சியிருந்த காலத்திலே, இலங்கையும் தமிழ்நாடும் ஒரே தட்டிலுண்ணும் இரண்டு புருக்களைப் போல் இருந்திருக்கின்றன. சோழமன்னன் ராசராசன், இலங்கையின் வட புலத்தை வென்று அந்த இடத்திற்கு மும்முடிச் சோழமண்டலம் எனும் பெயரைச் சூட்டினன்! இலங்கையிலிருந்து கொணர்ந்த ஆட்களைக் கொண்டு, காவிரிக்குக் கரையமைத்தான் கரிகாற்பெருவளத்தான் என்பர்! உட்பூசல்கள் உருவான நேரத்தில், இலங்கையரசர்கள் இடந்தேடி வந்தது இங்குதான். மூவேந்தர்களுக்குள்ளும் போர் மூண்டால் மூவரில் ஒருவரை ஆதரிக்க, சிங்கள அரசர்கள் படையுடன் வந்திருக்கின்றனர்.

பாண்டிய நாட்டுப் பைங்கிளிகள், இலங்கைச் சோலைக்குச் சென்றிருக்கின்றன! சோழனின் மணிமாடத்துக்குச் சிங்களத்துச் செவ்வந்திப் பூக்களும் வந்திருக்கின்றன! இலங்கையின் இரத்தினங்களை எடுத்து சேரநாட்டுத் தேனிதழ் மாதர் சிரிப்புத் தவழும் தத்தமது உதடுகளின் நிறத்துக்கு ஒப்பிட்டு மகிழ்ந்தகாலமும் உண்டு!

இலங்கையின் ஆதிக்குடிகள் திராவிடரே—பஃறுளியாறு கடல் கொள்ளப்பட்டபோது, இரத்தினத் தீவான இலங்கை பிரிபட்டது என்பர், சரித வல்லுநர்; ஈழம் எனும் சொல்லே, 'கேரளா' என்னும் சொல்லிலிருந்து மருவியதாகவும் ஒரு ஆராய்ச்சி இருக்கிறது. மலையாளத்தின் தென்னஞ் சோலைகளையும், இலங்கையிலும் அதே மண்வளம் இருப்பதையும் காட்டி, இரண்டுக்கும் ஒப்புவமை கூறுவோரும் உண்டு. கதிர்காமத்துக் கந்தனையும், திருகோணமலை போன்ற இடங்களிலுள்ள திருக்கோயில்களையும், தமிழறிந்தான் இராவணனையும் சான்றுக்கிழுத்து, பழந்தமிழர் வாழ்ந்த இடம் என்போரும், இருக்கிறார்கள். இப்போதும் நெல்லை மாவட்டத்தில் ஈழத்துப் பிள்ளைமார் என்போர் இருக்கிறுர்கள். இவ்வளவு சான்றுகள் ஏன்?

வாழ்ப்பாணம்!—எனும் சொல்லே, போதும், தமிழர்கள் எவ்வளவு தொன்மை கொண்டவர்களாக இலங்கையில் வாழ்கிறுர்கள் என்பதைக் கூற! இங்கே நம் பேச்சு வழக்கிலிருக்கிற தமிழைவிட, அங்குள்ளோர் பேசிடும் தமிழில், தூய்மையும் தொன்மையும் இருக்கிறது!

—பேரறிஞர் அண்ணு (13.3.61)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● பேரறிஞர் அண்ணுவின் பிறந்தநாள் செப்டம்பர் 15 ஆகும். ஈழத்தமிழர்களின் தொன்மைபற்றி அந்தப் பேரறிஞர் கூறிய கருத்தினையே மேலே தந்திருக்கிறேம்.

# தீண்டாமை, சாதிவேறுபாடுகளை சாடுகிறார் வாரியார்!

தற்போது கொக்குவில் மஞ்சவனப்பதிமுருகன் ஆலயத்தில் கந்தபுராண கதாப்பிரசங்கம் நிகழ்த்திவரும் தமிழக அறிஞர்—சமயப் பேரறிவாளர் — திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள், தமது பிரசங்கத்தினூடே சாதி வேறுபாடுகளையும், சமூக ஏற்றத்தாழ்வுகளையும், தீண்டாமையையும் சாடிவருகிறார்.

சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின் ஈழம்வந்துள்ள சைவப் பேரறிஞர் கிருபானந்த வாரியார் அவர்களின் தமிழ்ச் சுவை நிறைந்த பேச்சைக் கேட்பதற்கு தினமும் பல்லாயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும், சிறுவர்களும், சிறுமியர்களும் கூடுகின்றனர். தமிழ்க் கடலாக விளங்கும் வாரியார் அவர்கள், வடமொழியிலும் பாண்டித்தியம் பெற்றவர்கள், வேத, உபநிஷதங்களை கரைத்துக்குடித்தவர் நகைச்சுவையுடன் நல்ல கருத்துக்களை மக்கள் உள்ளங்களில் விதைப்பதில் வல்லவர். லண்டன், பாரிஸ் போன்ற நாடுகளில் இந்து மதக் கருத்துக்களைப் பரப்புவதற்காக அண்மையில் சென்றிருந்த வாரியார், அதையடுத்து இப்போது ஈழம் வந்துள்ளார்.

வாரியார் அவர்கள் இங்குள்ள சமுதாய, அரசியல் உணர்வுகளைப் புரிந்துகொண்டு தமது கதாப்பிரசங்கத்தினிடையே அவற்றையும் கலந்துவழங்கிவருகிறார். குறிப்பாக சைவசமயத்திலும், தமிழ் சமூகத்திலும் காணப்படும் சாதி வேறுபாடுகளையும் தீண்டாமையையும் வாரியார் சாடிவருகிறார்.

ஆண்டவனுக்குசாதிவேறுபாடு கிடையாதென்றும், இழிந்த குலத்தவன் என்று கருதப்பட்ட வேடன் வழங்கிய எச்சில்படுத்தப்பட்ட இறைச்சியையே உண்டவன் இறைவன் என்றும், அன்பே சமயத்தின் அடிப்படையென்றும் வாரியார் எடுத்துக்கூறிவருகிறார். சைவசமயத்தில் சாதிக்கு இடம் கிடையாதென்றும் சாதிபேதமும், தீண்டாமையும் இடையிலே நுழைக்கப்பட்டதென்றும் அன்பின் அடிப்படையில் இக்குறைபாடுகளை ஒழித்துக்கட்டவேண்டுமென்றும் அருட்திருவாரியார் அருளுபதேசம் செய்துவருகிறார்.

தமிழ் ஈழத்தில் நிலவும் தீண்டாமைக் கொடுமையை ஒழித்துக்கட்டி, சைவத்தையும் தமிழையும் பாதுகாக்க வாரியார் அவர்கள் தமது பேருரையின்போது நல்லுபதேசம் செய்யவேண்டுமென்று தமிழீழ விடுதலை கோரும் இளைஞர்கள் சார்பில் வண்ணை ஆனந்தன் வாரியார் அவர்களுக்கு விடுத்த வேண்டுகோளை ஏற்று சாதியெனும் சாபத்திட்டை ஒழித்திட அறிவு எனும் அருமருந்தை வழங்கி வருகிறார் வாரியார்.

## பி. டி. ஐ. நிருபா கருத்து!

"திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள், எஞ்சியிருக்கும் தமது ஆறுண்டு ஆட்சிக்காலம் முடிவதற்கிடையில், தமிழர்களின் மரபுவழித்தாயகத்துக்கு திட்டவட்டமான அடிப்படையில் மாநில சுயாட்சியை வழங்குவதன் மூலமும் — தமிழ் மாநிலத்தில் நடைபெறும் திட்டமிட்ட பெருந்தொகையான சிங்களக் குடியேற்றம் பற்றிய தமிழ் மக்களின் அச்சத்தை ஏதாவது உருப்படியான முறையில் போக்குவதன் மூலமும்— உலக அரங்கில் இன்று தாம் பெற்றுள்ள கௌரவமான இடத்தை உறுதிப்படுத்திக்கொள்வாரென்று இலங்கையிலுள்ள நியாய புத்திபடைத்தவர்களும், சர்வதேச அரங்கிலுள்ள நண்பர்களும் நம்புகிறார்கள். இதை அவர் செய்வாரென்றால்-தனிநாடு கோரிக்கையின் கவர்ச்சி உடனடியாக மங்கிவிடும்"

—இவ்வாறு பி.டி.ஐ. பத்திரிகையின் கொழும்பு நிருபர் திரு. ஆர். வரதாச்சாரி புதிய அரசியல்மைப்புப் பற்றி 7-9-78 டெயிலி நியூஸ் இதழில் எழுதியுள்ள கட்டுரையொன்றின் இறுதியில் குறிப்பிட்டுள்ளார்.

# கேட்டதெல்லாம் கொடுத்தவரிடம் ஒரு கேள்வி!

விஜிதா யாப்பா என்ற பத்திரிகை நிருபர் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களை அண்மையில் செவ்வி கண்டிருக்கிறார். அவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் கேட்ட கேள்விகளும், அதற்கு ஜெயவர்த்தன அளித்த பதில்களும் 12.9.78 சிலோன் டெயிலி நியூஸ் பத்திரிகையின் நடுப்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

அதிலே ஒரு கேள்வி—இப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி பற்றி உங்கள் கருத்து என்ன? என்பதாகும்.

அதற்கு ஜனாதிபதி ஜே. ஆர். அளித்துள்ள பதில்—

"தனிநாடு ஒன்றைத்தவிர — அவர்கள் கேட்டதையெல்லாம் நாம் கொடுத்துவிட்டோம். உண்மையில் அவர்களையும் அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள்போலவே நடத்தினோம். ஆயிரம் பேர் வேலைப்படிவம் அவர்களுக்கும் கொடுத்தோம். அவர்கள் இடமாற்றங்களை கோரினால் முடிந்தவரை அவற்றைச் செய்துகொடுத்தோம். நாங்கள் அதிகம் கொடுத்துவிட்டதாக இப்போது சிங்களரே கூறுகிறார்கள்!"

இதுதான் சாட்சாத் ஜனாதிபதி அளித்துள்ள மறுமொழியாகும்.

தமிழ்த் தேசிய இனத்தின் சட்டபூர்வமான சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை—1977 ஆடி 21ல் தமிழ் மக்கள் அளித்த ஜனநாயகத்தீர்ப்பை — தமிழ் தேசிய இனத்தின் அரசியல் அபிலாஷைகளை — எவ்வளவு தூரம் அற்பமானதாகக் கருதி அவற்றை ஜனாதிபதி ஜே. ஆர். அலட்சியப்படுத்துகிறார் என்பதையே அவரது மேற்கண்ட பதில் வெட்டவெளிச்சமாக எடுத்துக்காட்டுகிறது. அதுமட்டுமன்றி, தமிழர்களுக்கு இனி எதுவுமே வழங்கக்கூடாதென கிளர்ச்சிசெய்யுமாறு சிங்களவர்களை மறைமுகமாகத் தூண்டிவிடும் நச்சுவிதையொன்றும் மேற்கண்ட பதிலிலே சேர்க்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களின் அரசியலுரிமைக் கோரிக்கையென்பது—ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புப்படிவம், இடமாற்றம், ஜீப்வண்டிகள் போன்ற அற்பத்தனமான சலுகைகள் தாம் என்று ஜே. ஆர். கருதியிருக்கிறாரென்றால்— அவர் அவ்வளவு தூரம் நமது இனத்தை நமது இனத்தின் உயிர்துடிப்பான விடுதலை வேட்கையை வெறும் கிள்ளுக்கீரையாக கருதி அவமதிக்கிறாரென்பதே அர்த்தமாகும். உரிமை வேட்கை கொண்டெழுந்துள்ள ஒரு சமுதாயத்தை அற்ப சலுகைகளை வழங்கி அமைதிப்படுத்திவிடலாம் என்று கருதிய ஜே. ஆர். அவர்களை ஓர் அரசியல் ஞானியென்று எவன் ஒப்புக்கொள்வான்?

தனிநாடு கோரிக்கையை ஜே. ஆர். அவர்களால் ஒரு வேளை ஏற்றுக்கொள்ள முடியாமலிருக்கலாம்—அதை ஏற்பதற்கு தமது மக்கள் தமக்கு அங்கீகாரம் அளிக்கவில்லையென்று அவர் கூறினாலும் கூறலாம் — ஆனால்...!

அன்றொருநாள் தேசியப்பேரவையில், சோசலிச நாடுகளில் ஒவ்வொருதேசியஇனங்களுக்கும் பிரிந்து செல்லும்உரிமைஉள்ளிட்ட சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் சுட்டிக்காட்டியபோது, அவரை இடைமறித்து, "சோசலிச நாடுகளில் தேசிய இனங்களுக் வழங்கப்பட்டிருக்கும் அதே உரிமைகளை நான் ஏன் உங்களுக்குத்தரமாட்டேன் என்று நினைக்கிறீர்கள்?" என்று கூறியிருந்தாரே ஜே. ஆர்., தாமாக வலிந்துகொடுத்த அந்த வாக்குறுதியை இதுவரை நிறைவேற்றினாரா அவர்? தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்தாரா? புதிய அரசியல் சட்டத்தில் அந்த உரிமையை இடம்பெறச்செய்தாரா?

சிங்களத்துடன் தமிழும் சம அந்தஸ்துள்ள உத்தியோக மொழியாக வேண்டும் என்றும்—தாய்மொழியே தமிழ்பிள்ளைகளின் கட்டாய போதனாமொழியாக சட்டபூர்வமாக அமைய வேண்டுமென்றும் — பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறித்தவம், ஆகிய நான்கு மதங்களுக்கும் சமத்துவம் இருக்கவேண்டுமென்றும் — ஒரு மதத்துக்கு மட்டும் உயர்நிலை அளிக்கக்கூடாதென்றும்—மத்தியில் குவிந்துள்ள அதிகாரம் அவ்வப்பகுதி மாநிலங்களிலுள்ள மக்களின் கைகளுக்கு செல்லவேண்டுமென்றும்—1977க்கு முன்பு—தனிநாடு கோரிக்கையை முன்வைப்பதற்கு முன்பு—தமிழ் மக்கள் ஒரே குரலில் கோரினர்

## எண்ணம்

களே—அந்தக்கோரிக்கைகளையாவது ஜே. ஆர். அரசு வழங்கியுள்ளதா?

புதிய அரசியல் சட்டப்படியும்—

சிங்களமே நாட்டின் ஒரே உத்தியோக மொழியாக நீடிக்கிறது! தமிழுக்கு அந்த உரிமை வழங்கப்படவில்லை!

பௌத்தத்துக்குமட்டுமே அரசில் முதன்மை இடம்; பௌத்த சாசனத்தையும் அரசே தனது செலவில் பாதுகாக்கும்; இதே பாதுகாப்பும் உரிமையும் ஏனைய மதங்களுக்கு வழங்கப்படவில்லை!

தாய்மொழியே கட்டாயக்கல்வி மொழி என்ற சட்டப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை; கல்விமொழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றாரிடமே விடப்பட்டுள்ளது; தென்னிலங்கைத் தமிழ் மாணவர் சிங்களத்தில் கல்வி கற்று சிங்களவராவதற்கு வழிவகுக்கப்பட்டிருக்கிறது.

மத்தியில் குவிந்துள்ள அதிகாரம்—அவ்வப்பகுதி மக்களின் கைகளில் செல்வதற்கு, அதிகாரம் பரவலாக்கப்படுவதற்கு மாநிலசுயாட்சியை மக்கள் அனுபவிப்பதற்கு ஏற்ற திட்டம் எதுவும் முன்வைக்கப்படவில்லை!

தனிநாடு கோரிக்கை ஒருபுறம் இருக்கட்டும்—மேற்கண்ட உரிமைகளை, — தமிழ் மக்களுக்கு மனம் வைத்தால் வழங்கக்கூடிய உரிமைகளைக்கூட வழங்க மறுத்து, வழங்க விருப்பின்றி சிங்கள பௌத்த ஏகாதிபத்திய அரசியலமைப்பை உருவாக்கியுள்ள அதிஉத்தமர் ஜே. ஆரும் அவரது அரசும், தமிழ் மக்களுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் சில அற்பசலுகைகளை வழங்கி விட்டதாக [illegible] மூலம் தமிழினத்தின் விடுதலைக் [illegible]லாமென்று கருதினால், அதை விட முட்டாள்தனம் வேறுண்டா?

பரபரப்புடன் இப்போது விற்பனையாகிறது! "த சன்சோனி கொமிஷன் எவிடென்ஸ்" ஆங்கில வார இதழ் விலை ரூபா ஒன்று.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சோற்றுப் பருக்கைக்குக் காத்துக் கிடக்கும் சொறிநாயா தமிழன்?

அன்பு நண்பா,

ஒரு சில அற்ப சலுகைகளை வழங்கிவிடுவதன் மூலமும்—ஒரு சிலரைப்பிடித்து மந்திரியாக்கி அவர்களுக்குத் தலைப்பாகை கட்டிவிடுவதன் மூலமும்—உலகின் கண்களில் மண்ணைத் தூவி ஒரு சில பத்திரிகையாளர்களைக்கொண்டு போற்றித்திரு அகவல் பாட வைத்து விடுவதன் மூலமும் — அடிமைத்தனத்தைத்துடைத்தெறிந்து தமது நாட்டின் சுதந்திரத்தையும், சுயாதிபத்தியத்தையும் மீட்கத்துடித்து நிற்கும் விடுதலை வேட்கையும் வீறும் கொண்டெழுந்து விட்ட ஒரு மக்கள் கூட்டத்தை மயக்கிவிட முடியாது; திசை திருப்பிவிட முடியாது; ஏகாதிபத்தியத்துக்கு'ஜால்ரா' போடவைத்து விடமுடியாது என்பதை செப்டம்பர் 7ம், 8ம் நாட்களில் கொந்தளித்து எழுந்த தமிழ்ஈழம் சிங்கள ஆட்சியாளர்களுக்கும், உலகுக்கும் ஐயந்திரிபற உறுதியாக எடுத்துக் காட்டி விட்டது!

ஆம் நண்பா, சிங்கள சிறீலங்கா தமிழ் ஈழத்தை தனது ஒற்றையாட்சி ஏகாதிபத்தியப் பிடிக்குள் தொடர்ந்து வைத்துக் கொள்வதற்கென ஒரு தலைப்பட்சமாக தானே தயாரித்துக் கொண்டபுதிய அரசியலமைப்பு நடைமுறைக்குவந்த செப்டம்பர் 7-ம் திகதியும் அதையொட்டிய கொண்டாட்டங்கள் நடந்த செப்டம்பர் 8ம் திகதியும் பிடரியைச் சிலிர்த்துக்கொண்டு எழும் அரிமா போல—தூங்கிக்கிடந்த புலி துடித்தெழுந்ததுபோல—வீறு கொண்டு எழுந்த வேழம் போல—தமிழ் ஈழ மக்கள் பொங்கியெழுந்து புதிய அரசியலமைப்புக்கு எதிராக தமது புரட்சிக் குரலை—இதயத்தில் மூண்டுள்ள விடுதலைத்தீயின் சுவாலையை — வைராக்கியத்தை — மீண்டும் ஒரு முறை எடுத்துக்காட்டி விட்டனர்!

1972ம் ஆண்டு மே 22-ம் திகதி ஏதேச்சாதிகாரமாகத் திணிக்கப்பட்ட முந்திய அரசியலமைப்புக்கு எதிராக தமிழ்மக்கள் எப்படி வேகமுடன் இயக்கம் நடத்தினர்களோ-அதே போல இப்போதைய அரசியலமைப்பு உயிர் பெற்றெழுந்த 1978 செப்டம்பர் ஏழாம் நாளும் தமிழ் சமுதாயம் தன் உணர்ச்சியை வெளிப்படுத்தும் விதத்தில் புரட்சிப்போராட்டத்தை நடத்தியிருக்கிறது.

ஆம், தமிழீழ விடுதலைப் போராட்டம் இப்போது ஒரு வெகுஜன இயக்கமாக—மக்கள் இயக்கமாக—உருவெடுத்து விட்டதென்பதையும், தமிழ் ஈழ மக்களின் உள்ளத்தின் ஆழத்திலிருந்து கொழுந்து விட்டெரியும் விடுதலை வேட்கை எனும் சுவாலையை அணைப்பதற்கு அதை மூட்டியவர்கள் முயன்றாலும் கூட முடியாது என்பதையும் அரசியலமைப்பு எதிர்ப்புப் போராட்டம் நிதர்சனமாகக்காட்டிவிட்டது!

புதிய அரசியலமைப்பின் கீழ் தமிழர்களுக்கு அதிக சலுகைகள் வழங்கப்பட்டு இருப்பதாக நாளேடுகளும், அரசின் ஊதுகுழலான ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் நாளும் பொழுதும் பிரசாரம் செய்தன; உள்ளூர்ப்பத்திரிகைகள் எழுதினால் அதை ஒருவேளை தமிழ் மக்கள் நம்பமறுக்கக்கூடும் என்ற ஐயத்தின் காரணமாக, இந்தியாவின் பிரபல பத்திரிகையான 'இந்து', ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' ''டைம்ஸ் ஆப் இந்தியா'' போன்ற பத்திரிகைகளைப் பிடித்து அப்பத்திரிகைகளின் மூலமாக புதிய அரசியலமைப்பை தமிழர்கள் ஏற்கவேண்டுமென்று இதோபதேசம் செய்யப்பட்டது.

தமிழர்கள் கேட்டதெல்லாம் கிடைத்துவிட்டன; எழுபத்தைந்து வீதம் தமிழ்ஈழம் அமையப் போகிறது; தமிழர் விடுதலைக்கூட்டணியின் முகமூடி இனிக்கிழியப்போகிறது; இனிமேல் தமிழருக்கு ஏது குறை? செயவர்த்தன இருக்க செயமுண்டு பயமில்லை என்றெல்லாம் ஐக்கிய தேசியக்கட்சியின் ''ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு'' ஆக இருக்கும் தமிழ் அமைச்சர் தேவநாயகம் அவர்கள் அடித்து முழக்கினர்; அவர் என்ன செய்வார் பாவம், அமைச்சர் பதவியில் இருப்பவர் அப்படித்தானே பேசுவார்! அப்படிப் பேசினால்தானே மேலிடத்தில் அவருக்கு 'சபாஷ்' கிடைக்கும்?

இது மட்டுமன்றி--தமிழின விடுதலைப்பேரியக்கமான கூட்டணி கலகலவென்று உடைந்து சிதறப்போகிறது; கூட்டணியிலிருந்து இவர் விலகுகிறார், அவர் விலகுகிறார், அரசுடன் சேரப்போகிறார், அமைச்சராகப் போகிறார், என்றெல்லாம் நாள்தோறும் வதந்திகளை உருவாக்கி தமிழ் மக்களை குழப்பிவிட முற்பட்டனர்; வதந்திகளை உருவாக்கியது மட்டுமன்றி அந்த முயற்சியிலே ஈடுபட்டும் பார்த்தனர்! ஆனால் முடிவிலே அவர்களே ஏமாந்தனர்!

**தமிழர் விடுதலைக்கூட்டணி எனும் விடுதலை மாளிகையின் சுவரோடு மோதிப்பார்த்தார்கள்; அவர்களுக்கு சுவரின் புறத்தில் ஒட்டியிருந்த சில பொருக்குகள் தான் கிடைத்தனவே தவிர — ஒரு கல்லையாவது பெயர்த்துவிட முடியவில்லை!**

ஆம் நண்பா, தாகம் தீர்க்கும் குடிநீரென்று புதிய அரசியலமைப்பு எனும் கானல் நீரை உண்மையான விடுதலைத் தாகம் கொண்டெழுந்துள்ள தமிழ் ஈழமக்களுக்கு காட்டி ஏமாற்ற முற்பட்டனர்; அதிலேகிஞ்சிற்றும் மயங்கிவிட வில்லைத் தமிழினம்! அது தனது விடுதலைப்பாதையிலிருந்து விலகாது; சற்றும் பின்னேக்கியோ — திசைமாறியோ செல்லாது என்பதை செப்டம்பர் ஏழு-எதிர்ப்பியக்கம்உலகுக்கும் சிங்களவர்களுக்கும்உணர்த்தியிருக்குமெ ன்பதிலேது ளிகூடஐயமில்லை!

இம்முறை அரசியலமைப்பு எதிர்ப்பு இயக்கத்தை தமிழர்விடுதலைக்கூட்டணியின் பெருந்தலைவர்கள் முன்னின்று நடத்த வேண்டிய

## அரசியல் மேடை

அவசியமின்றி—தமிழ் ஈழமக்கள், இளைஞர்களும் யுவதிகளும், மாணவரும் மாணவியரும்—தாமாகவே முன்னின்று ஒரு வெகுஜன இயக்கமாக நடத்தி முடித்திருக்கிறார்கள். தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய செயற்குழு செப்டம்பர் ஏழு எதிர்ப்பியக்கம் குறித்து வெளியிட்டது ஒரு சமிக்ஞை மட்டுமே; மீதியை தமிழ் ஈழ மக்கள் தாமாகவே கொண்டு நடத்தியிருக்கின்றனர் என்றால் — தமிழ்ஈழ விடுதலைப் போராட்டம் ஒரு மக்கள் இயக்கமாக உருவெடுத்து விட்டது என்பதுதானே அர்த்தம்?

தமிழ் ஈழத்தில் ஒவ்வொரு தொகுதிகளிலும் பாடசாலைகளைப் பகிஷ்கரிப்பதில் தமிழ் பேசும் மாணவ மாணவியர் நூற்றுக்கு நூறுவீதம் உணர்ச்சிப் பிழம்பாக செயற்பட்டிருக்கின்றனர்! நம்மை அடக்கியாளும் அந்நிய நாட்டு ஏகாதிபத்திய வாதிகளின் தேசியக் கொடிக்கு மரியாதை தெரிவிக்க மறுத்தும் அவர்களது தேசிய கீதத்தை பாடமறுத்தும், அந்நிய நாட்டு அரசியலமைப்புக்கு விசுவாசம் தெரிவிக்க மறுத்தும் மாணவமணிகள் பாடசாலைகளைப் பகிஷ்கரித்துள்ளனர்! தமிழ் ஈழத்திலிருந்து எந்த ஒரு பாடசாலையிலிருந்தும் சிங்கள ஏகாதிபத்தியம் நடத்திய விழாவுக்கு 'பாண்ட்' வாத்தியம் வாசிக்க செல்ல முடியாதென தன்மானக்குலக் கொழுந்துகளாம் நம் அருமை மாணவிகள் திட்ட வட்டமாக அறிவித்து இனமானம் காத்தனர்!

பல இடங்களில் கறுப்புக்கொடிகள் ஏற்றப்பட்டன!

மானமும் வீரமும் ஒருங்கே நிலவும் மட்டுமாநகரில் நமது தமிழ் ஈழ விடுதலைக் கவிஞர் காசிஆனந்தனும், இளைஞர் தலைவன் சேனாதிராசாவும், தம்பி பொன் வேணுதாசும் இன்னும் ஒன்பது இளைஞர்களும் பகிஷ்கரிப்பு துண்டுப்பிரசுரங்களை விநியோகித்ததற்காக 6.9.78ல் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்! விடுதலை வீரனை மீண்டும் மீண்டும் சிறைச்சாலை அழைக்கிறது போலும்! விடுதலைவீரர்கள் கைதுசெய்யப்பட்டதை தொடர்ந்து மட்டுமாநகரின் மானத் தமிழ்மக்கள் பூரண ஹர்த்தாலும், பகிஷ்கரிப்பும் நடத்தி, ஜே. ஆரின் அரசியலமைப்பை நிராகரித்து, புதிய தமிழ் ஈழம் படைக்க உறுதிபூண்டனர்!

ஆம்—தமிழ்ஈழப் போராட்டத்துக்கு கிழக்கில் ஆதரவுஇல்லை—கிழக்குமாகாண மக்கள் தமிழ் ஈழத்தை, ஏற்றுக்கொள்ளவில்லை—என்ற தேவநாயகத்தினதும் ஆட்சியாளர்களினதும் கூற்றுக்குச் சவால்விடுவதுபோல இம்முறை அரசியலமைப்பு பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் மட்டக்களப்பே முன்னணி வகித்திருக்கிறது; பதுங்கியிருந்த புலி சரியான தருணத்தில் பாய்வதுபோல—அரசியலமைப்பு எதிர்ப்பியக்கத்தை வேகமுடனும், விறுவிறுப்புடனும் [illegible] தேவநாயகத்தின் முகத்தில் கரிபூசிவிட்டனர் மட்டுநகரின் மணியான இளைஞர்கள்!

யாழ்வளாகத்து மாணவ மணவியர் கறுப்புக்கொடியுடன் புதிய அரசியலமைப்புப் பிரதிக்கு தீயிட்டெரித்து— தமிழ் ஈழத்தின் இறைமையை மீட்பதென்று ஆணை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்!

ஊர்தோறும் — தொகுதிகள்தோறும்—உதயசூரியன்கொடி—நம் தமிழ் ஈழத்தாயின் மணிக்கொடி—நமது தேசிய கீதத்துடன் ஏற்றிவைக்கப்பட்டு, தமிழ் ஈழத்தின் இறைமையை மீட்டிடத் தமிழ்க்குலம் ஆணையேற்றுக்கொண்டிருக்கிறது.

**இவ்வாறு பல முனைகளில்—பலவழிகளில—தமது ஆற்றலுக்கும் சக்திக்கும் ஏற்றவகையில்—செப்டம்பர் ஏழாம் நாளில் தமிழ் சமுதாயம் தமிழ் ஈழத்தின் இறைமையை பலாத்காரமாக ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் புதிய அரசியலமைப்புக்கு எதிராக தனது கடுமையான எதிர்ப்பை உக்கிரமாகத் தெரிவித்துக்கொண்டிருக்கிறது!**

தமிழனின் ஆத்மாவிலிருந்து புறப்படும் இந்த சுதந்திர உணர்வை—விடுதலை அபிலாஷையை—அற்பசலுகைகளாலும், பதவியெனும் வலையை வீசி இயக்கத்தை அடுத்துக்கெடுக்க முயற்சிப்பதாலும், அயல்நாட்டுப் பத்திரிகைகள் சிலவற்றைக் கொண்டு ஆசிரியத் தலையங்கங்கள் எழுதுவிப்பதாலும், ஒருபோதும் அழித்துவிடமுடியாதென்பதையும் சலுகைகளில் மயங்குகிற நிலையில் இற்றைத் தமிழன் இல்லை யென்பதையும் ஜனதிபதி ஜே. ஆர். அவர்கள் இப்போதாவது புரிந்து கொண்டிருப்பாரானால்—அவரை ஓர் அரசியல் ஞானியென்று கூற முடியும்!

ஆனால் இதை அவர் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை— அல்லது புரிந்துகொள்ள மறுக்கிறார் என்பதையே அவர் விஜிதா யாப்பா என்ற பத்திரிகை நிருபருக்கு அளித்துள்ள பேட்டியொன்று எடுத்துக்காட்டுகிறது.

> ''தனிநாடு ஒன்றைத்தவிர—தமிழர் விடுதலைக்கூட்டணியினர் கோரியதையெல்லாம் நான் கொடுத்துவிட்டேன். அவர்களை அரசாங்க பா, உ.க்கள் போலவே நடத்திவருகிறேன். ஆயிரம் பேர் வேலைவங்கிப்படிவம் அவர்களுக்கும் கொடுத்திருக்கிறேன். அவர்கள் யாருக்காவது இடமாற்றம் கோரினால் செய்து கொடுக்கிறேன். அவர்களுக்கு அதிகம் கொடுத்துவிட்டதாக சிங்களவர்களே இப்போது புகார் கூறுகிறார்கள்!''

இவ்வாறு ஜே. ஆர். அவர்கள் கூறியிருப்பதாக டெயிலிநியூஸ் பத்திரிகை 12-9-78 இதழ் கூறுகிறது!

தனது சுயநிர்ணய உரிமையை—தனது நாட்டு விடுதலையைக் கோரிநிற்கும் தமிழ் ஈழ மக்களுக்கு—ஆயிரம்பேர் வேலைவங்கிப்படிவமோ—இடமாற்றமோ-ஜீப்புக்களோ இன்னும் இதுபோன்ற அற்பத்தனமான சலுகைகளோ வெறும் கால்தூசுக்குச்சமானம் என்பதை மெத்தப்படித்தவரான ஜே. ஆர். அறியாதவர்போல நாடகமாடுகிறார்! சிங்களவனின் சாப்பாட்டு மேசையிலிருந்து விழும் சலுகைகள் என்ற சோற்றுப்பருக்கைக்காக காத்துக்கிடக்கும் சொறிநாயல்லத் தமிழன் என்பதை அதி உத்தமர் என்று அழைக்கப்படும் ஜே. ஆர். புரிந்து கொள்ளவேண்டும். அவர் புரிய மறுத்தால், காலம் அவருக்கு இந்த உண்மையை நிச்சயம் புரியவைக்கும்!—

ஆம், இன்று செப்டம்பர் 17 அமரர் வன்னியனாரின் நினைவுதினமாகும்! அன்றொருநாள் பாராளுமன்றத்திலே தமிழனின் கொடி இலங்கை முழுவதும் ஒருநாள் பறந்தேதீரும் என்று சிங்கள ஏகாதிபத்தியத்தைப் பார்த்து சவால்விட்டுக் கூறினார் அமரர் வன்னியசிங்கம். அவர் கூறியதுபோல—தீவுமுழுவதும் உடனடியாக தமிழ்க் கொடி பறக்காவிட்டாலும் சுதந்திரத் தமிழ்ஈழத்திலாவது முதலில் தமிழ்க்கொடி—தமிழ்த்தேசியக்கொடி பட்டொளி வீசிப்பறக்கின்ற அந்த இனியநாள் கண்டிட வன்னியனாரைப்போல தியாக சிந்தையுடனும், அந்தரங்கசுத்தியுடனும் நம்மை நாம் பரிபூரணமாக விடுதலை வேள்வத்தியில் அர்ப்பணித்திட வன்னியர் பெயர்கூறி உறுதியேற்போம்!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வந்தேறுகுடி யார்
# தமிழனா? சிங்களவனா?
## பொய்ப்பிரசாரத்தினால் வரலாறு மறையுமா?

**"வடக்கும், கிழக்கும் ஒரு காலத்தில் சிங்களவருக்கே சொந்தமாயிருந்தன" என்று நாகவிகாரை அதிபதி கடகத்துகே நந்தராம தேரோ முன்வைத்துள்ள கருத்துக்குப் பதிலளிக்கும் நோக்கமாகவும் சில சிங்கள அரசியல் வாதிகளின் பௌத்தசிங்கள வகுப்பு வாதத்திற்குப் பதிலளிக்கும் நோக்கமாகவும் ஆராய்ச்சி, சரித்திரங்களின் உண்மைகளை மையமாக வைத்து இக்கட்டுரையை வரைகிறேன்.**

''புத்த பகவானைப் பற்றி எங்கள் அபிப்பிராயம் என்னவென்றால் 'அவருடைய கருத்தை அவரது சிஷ்யர்கள் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை'' என்பதே சுவாமி விவேகானந்தர் 1892ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அமெரிக்காவிலுள்ள சிக்காக்கோ நகரத்தில் நடைபெற்ற சர்வமத மகா சபையிலே இவ்வாறு கூறினார். விவேகானந்தர் கூறிய இந்த அபிப்பிராயம் இலங்கையிலுள்ள பௌத்த பிக்குகளுக்கு முற்றிலும் பொருந்தக் கூடிய அபிப்பிராயமாகும்.

பெரும்பான்மை மக்கள் என்ற துணிவில் வரலாறு தெரியாமல் வாய்க்கு வந்தபடி உளறுவது அறிஞர்களுக்கு அழகல்ல என்பதைத் தேரோக்களுக்குத் தெளிவாகத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

### சிங்கள இன வரலாறு

சிங்கள மக்கள் வரலாறு 2,500 ஆண்டுகளுக்கு உட்பட்டதே. அதற்கு முன்னர் இலங்கையில் சிங்களம் என்ற பெயரோடு ஒரு இனம் வாழ்ந்ததாகத் தெரியவில்லை. விஜயன் இலங்கையிற் புகுமுன் தென்னிலங்கையுட்பட இலங்கைமுழுவதும் தமிழர்களே வாழ்ந்தனர்.

விஜயன் கரையிறங்கிய தன் பின்னர் இலங்கைத் தமிழினத்தின் வாழ்வில் ஓர் சலனம் ஏற்பட்டது. அந்தச்சலனம் இயற்கையோடிசைந்து வளர்ச்சி பெற்றுவிட்டது. இன்று இலங்கையில் ஈரின மக்களை உண்டாக்கி விட்டது.

விஜயனும் அவன் நண்பர்களும் இந்நாட்டில் வந்து கரையிறங்கிய பொழுது, இலங்கையின் தென்பகுதியில் வாழ்ந்த மக்களையே முதலில் காண நேர்ந்தது. பின்னர் இவர்கள் பாண்டி நாட்டிலிருந்து தமிழ்ப்பெண்களை வரவழைத்து மனம் புரிந்து கொண்டனர். கலிங்கத்திலிருந்து வந்தோரின் தாய் மொழியும், தென்னகத்திலிருந்தோரின் திருந்தாத் தமிழும், பாண்டி நாட்டுத் தமிழும், சேர்ந்ததினால், தமிழிலிருந்து சிறிது மாறுபட்ட நடையுடன் ஒரு மொழி உதயமாயிற்று. அம்மொழி தன்னைச்சிங்களமாக்கிக் கொண்டது. இன்று பேசப்படும் சிங்களம் தமிழ் மொழியிலிருந்து அறுபது வீதம் (60%) சொற்களைக் கடன் வாங்கித் தனதாக்கிக் கொண்டுள்ளது.

இந்த 2500 ஆண்டுகளுக்கு உட்பட்ட சிங்கள இன வரலாற்றை வைத்துக்கொண்டு தான் நந்தராம தேரோ வடமாகாணத்திலுள்ள 'ஊர்ப்பெயர்கள் சிங்கள ஊர்ப்பெயர்களெனக் கூறி முழுப்பூசிணிக்காயைச் சோற்றில் புதைக்கப்பார்க்கிறார்.

### இதோ தமிழின வரலாறு

குமரிக்கண்டமென்ற (அழிந்த லெமூறியா) பெருநிலப்பரப்பின் ஓர் பகுதியாக இலங்கைஇருந்ததென்றும் அந்தப் பெருநிலப்பரப்பு முழுவதும் தமிழர்களே வாழ்ந்தனரென்றும் மொறிஸ் (Morries) கீன் (Keane), குருக்ஸ் (Crooks) என்னும் ஆசிரியர்களின் ஆராய்வும் அவர்கள் கொள்கைகளும் உறுதிப்படுத்துகின்றன என்று. திரு. ந. சி. கந்தையாபிள்ளை அவர்கள் எழுதிய தமிழ்ச் சரித்திரத்தில் கூறுகிறார். பிள்ளை அவர்களே லெமூறியாவே பழைய தமிழகம் என்றும் தக்க காரணங்கள் காட்டிச் சாதித்தனர் என்று திரு. ப. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் கூறுகின்றார்.

பன்மொழிப் புலவர், கா. அப்பாத்துரை அவர்களும், கா. சுப்பிரமணியபிள்ளை அவர்களும் அழிந்த லெமூறியாவே குமரிக்கண்டம் என்று கூறுகின்றனர். வரலாற்று நெறி நிற்போர் கொள்கைப்படி இலங்கை தமிழரின் தாயகம் என்பது மறுக்க முடியாது உண்மைப் படுத்தப்படுகின்றது.

விஜயன் இலங்கைத்தீவில் காலடி எடுத்துவைத்த பொழுது திராவிடர்களின் வழிபாட்டிடங்கள்பல இருந்தன. காலத்தால் முற்பட்ட முன்னேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம், ஆகியனவும் பிறவுமான ஈஸ்வரங்கள் இருந்தன. அனுராதபுரத்தில் மாபெரும் ஈஸ்வரம் ஒன்றிருந்தது. இன்றுள்ள ''அபயகிரி விகாரம்'' என்ற பௌத்த கோவில் ஈஸ்வரன்கோவிலை அழித்து அதன் மேல் எழுப்பப்பட்டதாகுமென மல்லசேகர, ஹரிச்சந்திரா ஆகிய தற்கால வரலாற்று ஆசிரியர்கள் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளார்கள். வழிபாட்டுச்சின்னங்களை ஆதாரமாகக் கொண்டு பார்த்தால் தமிழர்கள் தீவின் கரையோரம் எங்கும் நெருங்கி வாழ்ந்தார்கள் என்பது வெளிப்படை.

**உடுப்பிட்டியூர்**
**கே. எஸ். சிவலிங்கம்**

### எல்லாளன் காலம்

இத்தமிழ் மன்னன் அனுராதபுரத்தை (விஜிதபுரா) தலைநகராகக் கொண்டு ஏறத்தாழ இரண்டாயிரத்து நூறு ஆண்டுகட்கு முன் ஆட்சிசெய்தவன், இலங்கை முழுவதையும் ஆட்சிசெய்தவன். எல்லாளன் காலத்தில் (கி. மு. 111—167) இலங்கைத்தீவின்மேற்கு, வடக்கு, கிழக்குக்கரையோரப் பகுதிகளும், வன்னிப்பகுதியும், தமிழரின் வாழ்விடங்களாக இருந்தன. சிங்களவர்கள் தெற்குப்பகுதியிலும் தென்மேற்குப் பகுதியிலும் செறிந்து வாழ்ந்தனர்.

### தாலமியும் தமிழர் வாழ்விடமும்

ஏறத்தாழ ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு (கி. பி. 140) கிரேக்க நாட்டின் புவியியல் அறிஞர் தாலமி (Ptolemy) வாழ்ந் [illegible] தாலமி காட்டியுள்ள இலங்கைப்படத்தில் இடங்களின் பெயர்கள் நிறைய உண்டு. தாலமியின் படத்தை நோக்குவோர் இலங்கைத் தீவிலுள்ள பெரும் பாலான ஊர்ப்பெயர்கள் தமிழ்ப் பெயர்களாகத் தமிழர் தமது வாழ்விடங்களை அழைக்கும் பெயர்களாக இருந்தமையைக் காண்பர்.

மாதோட்டம் (Mudutti) அந்நாட்களில் சிறந்ததுறைமுகமாய் வணிகர் நிறைந்த நகரமாக விளங்கியது தாலமியின் படத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. தாலமி வாழ்ந்த காலத்தில் தமிழர் தம் கரையோர நகரங்களைப் பட்டினம் என அழைத்தனர். பட்டினம் (Spatana) எனத் திருகோணமலையைத் தாலமி குறிப்பிடுகின்றார். தாலமியின் வரைபடத்தினை நோக்கினால் தமிழர்கள் இலங்கையின் கரையோரங்களில் வாழ்ந்தமை, கோவில்கள் அமைந்தமை தெளிவு.

### சைவநாயன்மார் காலம்

ஆயிரத்து முன்னூறு ஆண்டுகட்கு முன்பு (கி. பி. 6ம் 7ம் நூற்றாண்டுகளில்) திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய இரு தலங்கள் மீது பாடிய பதிகங்களிலிருந்து, இந்நிலப்பகுதிகளில் தமிழர்கள், வாழ்ந்தார்கள். ஆலயங்களைப்பேணினார்கள். வழிபட்டார்கள் என்பதற்கு இவைசான்று.

### சோழர்காலம்

ஏறத்தாழ ஆயிரம்ஆண்டுகட்கு முன்பு கி. பி. 10, 11ம் நூற்றாண்டுகளில் சோழராட்சி இலங்கைத்தீவில் நிலைநிறுத்தப்பட்டது. ஜனநாதமங்களம் என அன்று பெயர் கொண்ட பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்டு மும்முடிச் சோழ மண்டலம் எனப்பெயரிட்டு இலங்கையை ஆட்சிசெய்தார்கள். சோழர் காலத்தில் தமிழர் இலங்கையில் செறிந்து வாழ்ந்தனர்.

அனுராதபுரம், பொலன்னறுவை வடக்கே வன்னிப் பகுதி, யாழ்ப்பாணக்குடாநாடு, இலங்கையின் கிழக்கு மேற்குக்கரையோரம் ஆகிய நிலப்பகுதிகளில் முழுவதும் தமிழர்கள் வாழ்ந்தனர்.

### மாகனின் ஆட்சி

கி. பி. (1215 — 1255) பொலன்னறுவையைத் தலைநகராகக் கொண்ட ஆட்சியாகும். மாகனைத்தொடர்ந்து சந்திரபானு (கி. பி. 1255—1262) என்ற சாவக இளவரசன். இவர்கள் காலங்களில் வடக்கு கிழக்குக்கரையோரப்பகுதிகள் தமிழரின் நிலப்பகுதிகளாக இருந்தன. சிங்கள நிலப்பகுதிகளில் கூட தமிழர் செறிந்துவாழ்ந்தமையை கி. பி. 14ம் நூற்றுண்டைச்சேர்ந்த நிக்காய சங்கிரகம் என்றநூல் விளக்கிக்கூறும்.

### ஆரியச் சக்ரவர்த்திகள்

எண்ணூறு ஆண்டுகட்கு முன் (கி. பி. 1282) இலங்கைத்தீவில் உள்ள தமிழரின் தனியான ஆட்சி மீண்டும் எழுந்தது. யாழ்ப்பாணத்து நல்லூரைத் தலைநகராகக் கொண்டு எழுந்த மன்னர்கள் ஆரியச்சக்கரவர்ந்திகள் என அழைக்கப்பட்டனர்.

ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சியில் தமிழ்ஈழ நிலப்பகுதி வரையறுக்கப்பட்டதாக இருந்தது.

மேற்கே, நீர்கொழும்புக்கு வடக்கேயுள்ள வாய்க்கால் ஆற்றில் (மாஓயா) இருந்து கரையோரமாக உள்ளநிலப்பகுதி தமிழ்ஈழ அரசின்ஆட்சியில் இருந்தது. இதை கி.பி. 1345 செப்டெம்பர் 27-ம் நாள் இலங்கைக்கு வந்த ''இபன் பற்றூற்ரு'' என்ற பெரியார் தனது பயண நூலில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்குக் கரையோரப் பகுதிகள் பாணமை, பழுகாமம், கொட்டியாற்றுப்பற்று கரைத்துறைப்பற்று, கரவாகுப்பற்று, மன்னாரை ஒட்டிய பகுதிகள் பனங்காம வன்னிமையின் ஆட்சியில் இருந்தன. முல்லைத்தீவை ஒட்டிய பகுதிகள் முள்ளியவளை வன்னிமையின் ஆட்சியில் இருந்தன. இவை அனைத்தும் யாழ்ப்பாண அரசின் மேலாணையை ஏற்றிருந்த ஆட்சித் தலைவர்களால் ஆட்சி செய்யப்பட்டன. 1621ம் ஆண்டு போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர் தமிழ் ஈழ அரசின் வலிமை குன்றியது.

—அடுத்த இதழில் முடியும்

---

# அகர வரிசையில் அண்ணா

அன்பிற்கே அழகுசெய்த அருந்தலைவன் அண்ணா!,
அருந்தமிழர் அன்பையெல்லாம் அள்ளிச்சென்றான் அண்ணா!,
ஆண்டதமிழ் ஆளவென ஆவலுற்றான் அண்ணா!,
ஆண்டவனின் ஆட்சியாக ஆண்டுசென்றான் அண்ணா!,
இல்லாதார் இதயத்தில் இருக்குமெங்கள் அண்ணா!,
இனியதமிழ் இன்றிசைக்க இங்கில்லை அண்ணா!,
ஈவதிலும் ஈர்ப்பதிலும் ஈடில்லான் அண்ணா!,
ஈடில்லா ஈவொன்றை ஈந்துசென்றான் அண்ணா!,
உணர்ச்சிக்கு உயிர்தந்த உயர்தலைவன் அண்ணா!,
உழைப்பாளி உலகத்தின் உயிர்மூச்சு அண்ணா!,
ஊக்கத்தில் ஊருக்கோர் ஊதுவர்த்தி அண்ணா!,
ஊருணியுள் ஊறிவரும் ஊற்றானான் அண்ணா!,
எந்தலைவன் என்றுரைக்க எமக்கிருந்தான் அண்ணா!,
எல்லையில்லா எம்மினத்தின் எழுஞாயிறு அண்ணா!,
ஏணியாகி ஏழைகளை ஏற்றிவைத்தான் அண்ணா!,
ஏழைகளை ஏங்கவிட்டு ஏறிவிட்டான் அண்ணா!,
ஐந்திற்கு ஐம்பதிற்கு ஐக்கியவான் அண்ணா!,
ஐயனுக்கு ஐயனாக ஐயமற்றும் அண்ணா!,
ஒறுத்தாரை ஒருநாளும் ஒறுக்காத அண்ணா!,
ஒளிவிளக்காய் ஒளிர்ந்தவெங்கள் ஒரேதலைவன் அண்ணா!,
ஓயாமல் ஓசைதந்த ஓவியம் அண்ணா!,
ஓய்ந்தாலும் ஓயாத ஓரியக்கம் அண்ணா!,

—குமார்

---

—7-ம் பக்கத்தொடர்

கிறார்கள். இவைகளை ஒரு தியாகி சந்தோஷமாக ஏற்றுக் கொள்வான். இந்தத் தாக்குதல்களால் எனக்கு நோய் பிடித்தது. லண்டனில் சிகிச்சை பெற்று வந்தேன். மீண்டும் என் மக்களின் சுதந்திரத்துக்காக உழைத்தேன். இளம் அமரர்கள் உயிரையே தியாகஞ் செய்தார்கள். எங்கள் மக்கள் செய்த தியாகங்கள் ஆச்சிமார் தங்கச்சிமார் செய்த தியாகங்கள்—நினைக்கும் போது ஆண்டவரே எங்கள்கட்சித்தலைவர்களின் இருதயங்களை தாய்மை அடையச் செய்யும்; கடமையை ஞாபகப்படுத்தும்; அவர்களை ஆசிர்வதிப்பீராக.

(அடுத்த இதழில் அமரர் வன்னிய சிங்கத்தின் பதிலுரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஆண்டவரே எங்கள் இயக்கத் தலைவர்களின் இதயங்களைத் தூய்மையடையச் செய்யும் அவர்களது கடமையை அவர்களுக்கு ஞாபகப்படுத்தும்'

## அமரர்கள் நடத்திய வன்னியர் விழாவில் டாக்டர் நாகாவின் உருக்கமான உரை!



**"மாற்றான் முன்னிலையில் எக்கட்டத்திலும் மண்டியிடாது மானம் காத்து வடக்கிருந்து உயிர்விடும் மரபு தமிழ் மரபு; அந்த மரபுப்படி சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஆயுதப்படையிடம் சிக்காது, நஞ்சருந்தி இங்குவந்த தியாகமறவன்— என் வீரத்தம்பி சிவகுமாரன் இப்போது பேசுவான்" என்று பேரறிஞர் அண்ணா அறிவித்ததைத் தொடர்ந்து சிங்கேறுபோல சிவகுமாரன் முழங்குகிறான்:—**

"உலகத் தமிழ்த் தந்தை செல்வா அவர்களே! தலைமை தாங்கும் பேரறிஞர் பெருந்தகையே! தன்னலமற்றுத் தமிழர்விடுதலைக்காய் உழைத்த தியாகச் செம்மல்— கோப்பாயக்கோமகனை ஏற்றிப் போற்றுவதற்காக நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

"நான் அதிகம் பேசுபவனல்ல; பேச்சைவிட செயலிலேயே அதிக நம்பிக்கை கொண்டவன். பெரியார் வன்னியனார் தன்விடுதலை விதையை கோப்பாய்த் தொகுதியிலேயே ஆரம்பத்தில் விதைத்தார். அந்த விதையிலிருந்து முளைத்தெழுந்தவன்தான் நான். வன்னியனார் வழியில் சிறுமை கண்டு பொங்கியெழுந்தேன். நான் வன்னியனாருடன் பூவுலகில் நேரடியாக பழகியவன் அல்லன்; சின்னஞ் சிறுபிள்ளையாக அம்மாவின் மடியிலிருந்தபடியே மேடைகளில் தலைவர் வன்னியசிங்கம் எழுப்பிய விடுதலைப் பேருரைகளைக் கேட்டிருக்கிறேன். அந்த வீரகர்ச்சனைகள் என் இளம் இரத்தத்துடன் கலந்தன; எனது ஒன்பதாவது வயதிலேயே வன்னியனார் பூவுலகை விட்டு இங்கு வந்து விட்டார்.

1958-ம் ஆண்டு வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் மாநாட்டில் "வெறிநாய்களைக் கட்டிவையுங்கள்—இன்றேல் சுட்டு வீழ்த்துவோம்" என்று வன்னியனார் எழுப்பிய முழக்கமே என் இதயத்தில் நிறைந்து நின்றது. வெறிநாய்களை மட்டுமல்ல— துரோகநாய்களையும் ஒழித்துக் கட்டவேண்டுமென்று உறுதியெடுத்தேன் — அந்த முயற்சியிலீடுபட்டிருக்கும் போதே இடைநடுவில் இங்கு வந்துவிட்டேன்.

"நான் இங்கு வரும்போது "மீண்டும் பிறப்பேன்—விடுதலைக்குப் போரிடுவேன்" என்று கூறிவிட்டு வந்தேன். அந்த அவசியமில்லாமல் என்னையும் விட தீவிரமாகப் போராடிவரும் இளைஞர்கள்—மயிர்க்கூச்சலிடச் செய்யும் வீர செயல்களைப் புரியக்கூடிய இளைஞர்கள்— தமிழ்ஈழத்தில் இன்று வளர்ந்துவருவதைக்கண்டு பரவசமடைகிறேன். பாலஸ்தீன விடுதலை இயக்க இளைஞர்களையும் மிஞ்சுகின்ற முறையில் தமிழ் இளைஞர்கள் தமிழ் ஈழத்தின் மீட்சிக்காகவீரத்துடன் போராடி அடிமைத்தளை அறுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. என்னையும், தமிழ்ஈழத்தின் விடுதலைப்போரை நடத்திவரும் எண்ணற்ற இளைஞர்களையும் உருவாக்கிய வித்தாக விளங்கும் தலைவர் வன்னியனாரின் தியாகத்தைப் போற்றுவோம்!

"பேரறிஞர் அவர்களே, தியாகத்திருவிளக்கு வன்னியனார் அவர்களே வணக்கம். எனக்கு இங்கு எதைப் பேசுவதென்றே தெரியவில்லை. என் கண்கள் குளமாகின்றன. நான் விடுதலை இயக்கத்தில் சாதாரண தொண்டன். இறுதிமட்டும் தொண்டனாகவேயிருந்து இலட்சியத்துக்காகவே உழைத்தேன். கடைசிகாலத்தில் வெறும்பச்சைத் தண்ணீரைக் குடித்தபடியே தமிழ் நாட்டின் வீதி வீதியாக திரிந்து தமிழ் ஈழ விடுதலைக்காக பிரசாரம் செய்தேன். இறுதிக்காலத்தில் என்னை இயக்கம் கைவிட்ட போதும், இயக்கத்தலைவர்கள் மறந்தபோதும், நான் இயக்கத்தையோ, இயக்கத் தலைவர்களையோ மறந்தவன் அல்லன். பாவம், எங்கள் பெரியவர். அவரது உண்மை ஒளிபரப்பும் முகத்தை நினைக்கும்போது என் கவலைகள் யாவும் எங்கோ மறைந்துவிடும். அவரே என்றும் என் இதயதெய்வம்.

● ஒரு கற்பனைச் சித்திரம்:

### அளிப்பவர்: வித்துவான் வ. கந்தையா

"அவர் முன்பு ஒருமுறை தமிழ்ஈழத்திலிருக்கும்போது "இனவிடுதலை இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இளம் வீரர்களும் வீராங்கனைகளும் முன்வந்தாலொழிய நான் எப்படி ஓய்வெடுக்கமுடியும்" என்று டாக்டர் நாகநாதனுக்கு கூறியதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அமரர் அவர்களே! அதோ ஈழத்தமிழகத்தில் எண்ணற்ற இளைஞர்கள் தம்மை அர்ப்பணித்து தமிழ் ஈழநாட்டின்விடுதலைகாணப் புறப்பட்டுவிட்டனர். இனி நீங்கள் நிம்மதியாக மகிழ்வுடன் ஓய்வெடுங்கள்; உங்கள் லட்சியம்—இலங்கை முழுவதும் தமிழர் கொடி ஒரு நாள் பறக்கும் என்றீர்களே— அந்த இலட்சியம் மிகவிரைவில் நிறைவேறப் போகிறது."

## இராசரத்தினம்

சிவகுமாரன் இவ்வாறு பேசிவிட்டு அமர—அண்ணா மற்றொருவரை பேச அழைக்கிறார். "பட்டினிகிடந்து பசியால் மெலிந்து பாழ்பட நேர்ந்தாலும்-தமிழ்மகளின் துயர் துடைக்கமறப்பேனா" என்றான் என் தம்பி கவிஞர் காசி.ஆனந்தன். இன்றைக்கும் அவன் சிறையில் வாடுவதாக எனக்கு செய்திவந்திருக்கிறது. அந்தக் கவிஞனின் நெருங்கிய நண்பரும் நாடுவிட்டு நாடு வந்து, தமிழ்நாட்டில் தமிழ் ஈழவிடுதலைக்கு ஆதரவு திரட்டி, நோயுற்றநிலையிலும், பட்டினிகிடந்தும் இலட்சியத்துக்காக உழைத்து, தமிழ் நாட்டிலிருந்தே இங்குவந்து சேர்ந்த தியாகி இராசரத்தினம் அவர்கள் இப்போது பேசுவார்" என்று [illegible] அழைத்திட, அமரர் இராசரத்தினம் பேசத்தொடங்குகிறார்—

நான் தமிழ் நாட்டில் எங்கோ ஒரு மூலையில் அனாதைபோல மரணப்படுக்கையில் கிடந்தபோது கோப்பாய்க் கோமகனையே எண்ணி எண்ணி அழுதேன். அவர் பூவுலகில் இருந்திருந்தால், ஒரு தொண்டனை எப்படியெல்லாம் ஆதரிப்பார் என்று எண்ணிப்பார்த்தேன்.



"என்னை இயக்கம் மறந்ததுபற்றி எனக்கு கவலையில்லை. தலைவர் வன்னிய சிங்கத்தையே பலர் மறந்துவிட்டபோது நான் எம்மாத்திரம்? இதற்குமேல் நான் எதைப்பேசுவது?

## அமரர்நாகா

கண்களிரண்டிலிருந்தும் கண்ணீர்த்துளிகள் வீழ, தனது பேச்சை இராசரத்தினம் முடித்துக்கொள்ளுகிறார்; அடுத்து அமரர் டாக்டர் நாகநாதன் தொண்டையைக் கனைத்தபடியேபேச எழுகிறார்:—

"தேவனே! எங்கள் மீது கருணை வைப்பீர்". அமரர் [illegible] களே! நாங்கள் பரிசுத்த ஆவிகள். பூமியில் பரிசுத்த மனிதராக இருந்தோம். இந்தப் பெரிய தேவ மண்டபத்தில் நல்ல மனிதர்களையே பார்க்கிறோம்.



வன்னிய சிங்கம் பெரிய தியாகம் எல்லாம் செய்தார். அவர்எங்களின் தலைவன், அவரை நாங்கள் தான் சாகடித்தோம். எங்களுக்கு அரசியல் குருஅவர். அவருக்கு தொகை வேலை கிடந்தது. நாங்கள்கட்சிவேலையை பங்கிட்டுச் செய்யவில்லை. எனக்கும் நிறைய வேலை இருந்தது. அவர் இரவுபகலாக பாடுபட்டார். தமிழ் பேசும் சனங்களுடைய ஊர் எல்லாம்போவார். அவர்களுடைய குறைகளைக் கேட்பார். இராப்பகல் பிரயாணஞ் செய்வார். திட்டம் போட்டுநடத்துவதில் சேர்ச்சில் மாதிரி. சிங்களச்சட்டம் பண்டாரநாயக்கா கொண்டுவந்தான். கோல்பேசிலே சத்தியாக்கிரகஞ் செய்யவேணும் என்று திட்டம் போட்டார். சத்தியாக்கிரகஞ் செய்தோம். அவரை அந்த மடையங்கள்— சிங்களக் காடையன்கள் தாக்கினார்கள். அவரது மூக்கால் இரத்தம் பெருகியது. உடம்பு முழுதும் அடிபட்டது. சட்டையை கிழித்தார்கள். சட்டை இல்லாமல் வேட்டியோடு பாராளுமன்றம் போனார்.

ஜோண்கெனடிசொன்னார் பலதலைமுறைகள் பிறக்கின்றன. சாகின்றன. சிலதலைமுறை ஆட்களுக்குத் தான் சுதந்திரத்துக்குப் போராடும் வாய்ப்பு கிடைக்கும். அவர்களுக்குத்தான் பிறந்த பலன் கிடைக்கும் என்றார்.

வன்னிய சிங்கம் எவ்வளவோ—நிறைய—போராட்டங்களை நடத்தினார். திருமலை யாத்திரைக்கு திட்டம் போட்டார். மாகாத்மா காந்தி உப்பு சத்தியாக்கிரகஞ் செய்தார். இந்தியாவில் சனங்கள்கூட்டமாகதிரண்டு உப்பை அள்ளினார்கள். பெரிய உணர்ச்சி வந்தது. திருமலை யாத்திரை செய்தோம். எங்கள் மக்கள்— இலங்கை முழுதும் சரியான உணர்ச்சி வந்தது. தீண்டாமை சாகப்பாடுபட்டார் பெரிய சாதிவன்னியசிங்கம், தீண்டாமை போகத்தானே எல்லாம் செய்தார். சிங்களவன் சிறீபோடச் சட்டம் வைத்தான். அதைஎதிர்த்து மறியல் போனார். ஆயிரந் தொண்டர்கள் மறியல் போனார்கள். பேசுவது குறைவு. நிறைய—நிறையச் செய்வார்.

சிங்கள அரசு தமிழ்பேசும் மக்களின் நிலங்களைப் பிடித்து சிங்களவனைக் குடியிருத்தியது. வன்னிய சிங்கம் தமிழ் பேசும் மக்களை குடியேற வைத்தார். அடிக்கடி அவர்களைப் பார்த்து உதவி செய்வார். அவருக்கு ஓய்வு இல்லை. எங்கு கூட்டம் நடந்தாலும் போவார். தீண்டாமையைச் சொல்லுவார்: குடியேற்றத்தைச் சொல்லுவார். தமிழ் மொழியை சொல்லுவார், சுதந்திர உணர்ச்சி ஊட்டுவார். தேவர் உலகத்துக்கு வந்தும்கண்ணீர் வடிக்கிறார். தன்னுடையமக்கள் வருந்துவதை பொறுக்கமாட்டார். பூமியில் எப்படிப்பாடுபட்டாரோ இங்கேயும் பார்த்துப்பார்த்து கண்ணீர் வடிக்கிறார். ஓய்வில்லாமல் உழைத்தார்; நாங்கள் அவரின் வேலைகளில் சரியாக பங்கெடுக்கவில்லை;

நான் கார்ல் மாக்ஸ், லெனின், மாவோ என்றவர்களின் அரசியல் ஞானத்தில் பற்றுடையவன். என்னுடைய எண்ணம் பிறக்கிறவர்கள் சுதந்திர நாட்டில் பிறக்கவேணும், சுதந்திரமாக வாழவேணும், ஆண்டவருடைய உலகத்தில் எல்லாரும் சமம். அடிமையாக வாழ்வது மடமைத்தனம். அதுகொடுமை, எங்கள் இனத்தை சிங்களத்தலைவர்கள் அழிக்க நினைத்தார்கள்; தமிழரசுக்கட்சியை ஆரம்பித்தோம். அரசியல் யாப்பு ஒன்றை ஆங்கிலத்தில் எழுதினேன்; தமிழில் மொழிபெயர்த்து வெளிவந்தது.

இலங்கையில் எல்லா ஆங்கில வைத்தியர்களிலும் பார்க்க நானே கூடுதல் வருமானவரி கட்டினேன். அரசியல் ஊழியஞ் செய்தேன். என்னிடம் உதவி கேட்டவர்களுக்கு உதவிசெய்தேன் கட்சி நண்பர்களுக்கு மட்டுமல்ல. எல்லா நண்பர்களுக்கும் பணிசெய்தேன், ஏழைகளைக்கண்டால் வருந்துவேன். அரசியலில் முழுக்க ஈடுபட்டேன். என்னுடைய தொழிலை செய்ய முடியவில்லை. வருமானம் இல்லை. வறுமையால் கஷ்டப்பட்டேன்: ஆனாலும் என்னுடைய ஊழியத்தைச் சந்தோசமாகச் செய்தேன். எல்லா மக்களும் எங்களை நம்பினார்கள். தந்தை செல்வநாயகம் எவ்வளவோ லட்சம் ரூபாவை இழந்தார். நோயாளி ஆனார்.

இத்தேவர்கள் சபையில் இருக்கும் இராசவரோதயம் ஏகாம்பரம், மாணிக்கவாசகர், இராசமாணிக்கம், அழகக்கோன், கந்தையா எல்லோரும் துன்பத்தை அடைந்தார்கள். சத்தியாக்கிரகத்தில் பொலிசாரால் தாக்கப்பட்டோம். குண்டாந்தடியால்பொலிஸ் என் மண்டையில் அடித்தான். குண்டாந்தடி இரண்டாக முறிந்து பறந்தது. பொலிஸ் நிலையத்தில் என்னைத் தாக்

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணிப் படுகொலை

## 44000 நட்டஈடு வழங்கும்படி உத்தரவு!

நாவற்குழியைச் சேர்ந்தவரும் மக்கள்வங்கி ஊழியருமான திரு. பொ. பரராசாவை செம்மணியில் வைத்து 1976 ஆகஸ்ட் 10ம் திகதி பொலிசார் சுட்டுக் கொலைசெய்தது சம்பந்தமாக பொலிசாரிடமிருந்து நஷ்ட ஈடுகோரித் தொடரப்பட்டிருந்த வழக்கில் இறந்த பரராசாவின் தந்தை சி. பொன்னம்பலத்துக்கு சட்டமா அதிபரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவரெனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள கான்ஸ்டபில் ஸ்ரான்லியும் ஒருமித்தும், தனித்தும் நஷ்டஈடாக ரூபா 44000 வழங்கவேண்டுமென யாழ் மாவட்ட நீதிபதி திரு. ஜே. வி. ஆசீர்வாதம் 11.9.78ல் தீர்ப்பளித்துள்ளார்;

இவ்வழக்கில் மனுதாரரான பரராசாவின் தந்தை சி. பொன்னம்பலம் சார்பில் சட்டத்தரணி திரு.எஸ். நடேசன் கியூ. சி, சட்டத்தரணி கே. கந்தசாமி சட்டத்தரணி எஸ். நாகராசா, சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், சட்டத்தரணி வெ. யோகேஸ்வரன் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர்.

# சுதந்திரனுக்கு தனிச்சிங்களத்தில் பற்றுச்சீட்டு

அரசியல் சட்டத்தில் தமிழுக்கும் இடம் கொடுத்துவிட்டோம்; தமிழுக்கு தேசிய மொழி அந்தஸ்து கிடைத்துவிட்டது; மொழிப் பிரச்சினை தீர்ந்துவிட்டதென்று கொக்கரித்தார் அமைச்சர் தேவநாயகம்— ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாதென்றோம் நாம்!

இதோ அது உண்மையாகிவிட்டது.

இலங்கைப் பத்திரிகைப் பேரவைக்கு பதிவுக்கட்டணமாக நூறு ரூபாவுக்கு காசோலையை தமிழில் எழுதப்பட்ட இணைப்புக்கடிதத்துடன் அனுப்பி வைத்திருந்தோம். அதற்குரிய பற்றுச்சீட்டு தனிச் சிங்களத்தில் எழுதப்பட்டு பத்திரிகைப் பேரவையிலிருந்து நமக்கு கிடைத்துள்ளது. இத்தனிச் சிங்களப்பற்றுச் சீட்டின் இலக்கம் 000917.

சிறிமா ஆட்சியின் கீழ் கூட சுதந்திரனுக்கு சிங்களப் பற்றுச்சீட்டு அனுப்பப்படவில்லை! ஜே.ஆரின் தார்மீக ஆட்சியின் கீழ்— மொழியுரிமை வழங்கப்பட்டுவிட்டதாக கூறப்படும் அரசியலமைப்பின்கீழ்த் தான் இந்த அக்கிரமம் நடக்கிறது.





சிக்கனமே சிறந்த செல்வம்

சிக்கன சலவைக்கு மில்க்வைற் பார்சோப் வாங்கி உபயோகியுங்கள்.
பெரிய அளவிலும், சிறிய அளவிலும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது. 10 மேலுறைகளை அனுப்பி அழகிய பொலித்தீன் பாக்கை பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற்—யாழ்ப்பாணம்



**செல்லமகால்** 2-வது வாரம்

ஜெமினி கணேசன், தேவிகா, முத்துராமன், ரங்கராவ் நடித்த-

**வாழ்க்கைப் படகு**

(புத்தம் புதிய கொப்பி)

4-வது வாரம்

**கெயிட்டி** [கொட்டாஞ்சேனை]

எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி - நடித்த -

**தாய்க்குத் தலைமகன்**

**நீகல்** மட்டக்களப்பு

**சீதாதேவி**

] கலர் — ஆங்கிலம் ]

**கிங்ஸ்லி** 2-வது வாரம்

(கொழும்பு)

சிவகுமார், ஜெயசித்திரா நடித்த—

**பொண்ணுக்கு தங்க மனசு**

[புதிய பிரதி]

**விஜயா** (மட்டுநகர்) 9-வது வாரம்

சிவாஜி நடித்த—

**உத்தமன்**

— கலர் —

**கெப்பிட்டல்** 2-வது வாரம்

சிவாஜி சாவித்திரி நடித்த —

**காத்தவராயன்**

(புதிய பிரதி)

**லிடோ** (யாழ்நகர்) 4-வது வாரம்

- எம். ஜி. ஆர். நடித்த -

**தாய்க்குத் தலைமகன்**

(புதிய கொப்பி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.